**செ. கு. எண்: 100** **நாள்:20.04.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.4.2013

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்பாசேத்தி பிரதான சாலையில் 14.4.2013 அன்று பரமக்குடியிலிருந்து மதுரை சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த வீட்டின் மீது மோதியதில், வீட்டின் முன் நின்று கொண்டிருந்த திரு. காந்தி என்பவரின் மகன் சிறுவன் செல்வம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நென்மேலி கிராமம் அருகே சென்று கொண்டிருந்த இரு சக்கர வாகனம் மீது 14.4.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த நென்மேலி கிராமத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி என்பவரின் மகன் முருகன் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த சிறுவன் செல்வம் மற்றும் முருகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், திருப்பாசேத்தி பிரதான சாலையில் 14.4.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் நான்கு நபர்கள் காயமடைந்துள்ளனர்

என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சிறுவன் செல்வம் மற்றும் முருகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**